

சேலம் மாவட்டம், அம்மாபேட்டை மண்டலத்திற்குட்பட்ட வார்டு 38, 39 பகுதிகளுக்கு செட்டிக்கார மண்டபத்தில் நேற்று முன்தினம் (22.07.2025) நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் வழங்கப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி ஆணையர் இளங்கோவன், அம்மாபேட்டை மண்டல உதவி ஆணையர் வேடியப்பன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள உள்ளனர்.



திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி வட்டாரம், கெஜல் நாயக்கன்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாமை மாவட்ட திமுக செயலாளர் க.தேவராஜி தொடங்கி வைத்தார் . நிகழ்ச்சியில் கந்திலி தெற்கு ஒன்றிய செயலாளர் டி.அசோக்குமார், கந்திலி மேற்கு ஒன்றிய செயலாளர் கே.முருகேசன், கந்திலி ஒன்றியக் குழுத் தலைவர் திருமுருகன் மற்றும் அரசு துறை அதிகாரிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

### தயாளன் தலைமை! மரக்காணம் ஒன்றியம் எண்டியூர் ஊராட்சியில்

# 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திண்டிவனம் ஜூலை 23.

மரக்காணம் ஒன்றியம் எண்டியூர் ஊராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார்.

ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும் எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் கடந்த 15 ஆம் தேதிசிதம்பரத்தில் தொடங்கி வைத்தார். இதை அடுத்து விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் எண்டியூர் ஊராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் முகம் நடைபெற்றது.

மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை தாங்கினார்.ஒன்றிய துணை சேர்மன் பழனி முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில்முன்னாள் அமைச்சரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான்கலந்து கொண்டு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமைதொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு கணினியில் பதிவேற்றம் செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார்

அப்போது பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் விவரம் குறித்து துறை சார்ந்த அதிகாரிகளிடம் கேட்டறிந்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. முகாமில்மக்கள் நல்வாழ்வு துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தையும், ரத்த அழுத்தம், சர்க்கரை, நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து மாத்திரை அடங்கிய பெட்டகத்தினையும் அவர் வழங்கினார்.

இதைத் தொடர்ந்து முகாமில் கலந்து கொண்ட அரசு அலுவலர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ அவர்களுக்கு பந்தி பரிமாறிய சம்பவம் அரசு அலுவலர்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டுஇலவச வீட்டு மனை பட்டா, குடும்ப அட்டை, முதியோர் ஓய்வூதியம் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் பயன் பெறுவதற்கு மனு அளித்தனர்.

நிகழ்ச்சியில் திண்டிவனம் சிப்காட்தனித் துணை ஆட்சியர் விஜயா, மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன்,

ஒன்றிய கவுன்சிலர் திருநாவுக்கரசு, ஊராட்சி மன்ற தலைவர் ராஜாராம், துணைத் தலைவர் ஜனார்த்தனன், மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் திருமலை, ஒன்றிய கிளைக் கழக செயலாளர்கள் அருள் குமரன், ஜெயச்சந்திரன், மேஸ்திரி ஏழுமலை, சிங்கனூர் முருகானந்தம், ஒன்றிய நிர்வாகிகள் ரவிக் குமார், ஆதிகேசவன், மீனா குமாரி, தேவதாஸ், கிளை நிர்வாகிகள் வேலு, மனோகரன், ஏழுமலை வசந்தம், சுதாகர்உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வட்டார வளர்ச்சி அலுவலர் அருளரசி அனைவருக்கும் நன்றி கூறினார்.

### குரூப் 4 விடைத்தாள்கள் கொண்டுவரப்பட்டதில்

# எவ்விதமான குளறுபடிகளும் நிகழவில்லை!

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் விளக்கம்!

சென்னை, ஜூலை 24-

குரூப் 4விடைத்தாள்கள் கொண்டு வரப்பட்டதில் எவ்விதமான குளறுபடிகளும் நிகழவில்லை என டிஎன்பிஎஸ்சி விளக்கமளித்துள்ளது. 'விடைத்தாள்கள் முறையாக சீலிடப்படாமல் அட்டைப்பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்தன என்று வரும் செய்திகள் அனைத்தும் ஆதாரமற்றவையாகும்' எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் டிஎன்பிஎஸ்சி வெளியிட்டுள்ள அறிக்கையில்; "தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண். 07/2025, நாள்25.04.2025ன் வாயிலாக நேரடி நியமனத்திற்கு ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - IV (தொகுதி - IV) க்கான தேர்வுகள் கடந்த 12.07.2025 இல் மாநிலம் முழுவதிலும் 4,922 தேர்வு மையங்களில் நடைபெற்றது. இதில் 13.89,238 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்ததில் 11,48,019 விண்ணப்பதாரர்கள் தேர்வினை எழுதினர். தேர்வுகள் முடிந்து அனைத்து விடைத்தாள்களும் உரிய பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சீலிடப்பட்ட இரும்புப்பெட்டிகளில் (Stainless Steel Boxes) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்திற்கு 13.07.2025 காலை வரை பாதுகாப்பாக வரப்பெற்றுள்ளன. இதில் எவ்விதமான குளறுபடிகளும் நிகழவில்லை.

இந்நிலையில் சேலம் மாவட்டத்தில் கடந்த 12.07.2025 மு.ப. அன்று நடைபெற்ற ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு IV (தொகுதி - IV) தேர்வு தொடர்பான விடைத்தாள்கள் முறையாக சீலிடப்படாமல் அட்டைப்பெட்டிகளில் இருந்தது என பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களில் இன்று செய்திகள் வந்துள்ளன. சேலம் மாவட்ட விடைத்தாள்களும் சீலிடப்பட்ட இரும்புப்பெட்டிகளில் (Stainless Steel Boxes) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்திற்கு 13.07.2025 அதிகாலை பாதுகாப்பாக வரப்பெற்றுள்ளன. விடைத்தாள்கள் அட்டைப்பெட்டிகளில் கொண்டுவரப்பட்டன என்ற செய்திகளில் உண்மை இல்லை.

OMR விடைத்தாள்கள் அனைத்தும் இரும்புப் பெட்டிகளில் (Stainless Steel Boxes) வைத்து சீலிடப்பட்டு அவை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்திற்கு வந்து சேரும் வரை 24×7 முறையில் நேரலையாக கண்காணிக்கப்பட்டு அவற்றின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இவை முழுவதும் வீடியோ பதிவு செய்யப்பட்டு CCTV Camera மூலமாகவும் கண்காணிக்கப்படுகிறது. எந்த ஒரு விடைத்தாளும் செய்தி ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டவாறு அட்டைப் பெட்டிகளில் கொண்டு வரப்படுவது இல்லை.

பத்திரிகைச் செய்திகளில் கொடுக்கப்பட்டுள்ள புகைப்படங்கள், பயன்படுத்தப்பட்ட காலி அட்டைப்பெட்டிகள் மற்றும் தேர்வுக்கு உபயோகப்படுத்தப்பட்ட பின்னர் உபரியாக இருந்த வினாத்தாள்கள் அடங்கிய அட்டைப் பெட்டிகள் போன்றவை யாகும். இவை தேர்வில் பயன்பட்டது போக மீதமிருந்த வினாத்தாள்கள் என்பதால், வழக்கமான நடைமுறையின்படி அந்தந்த மாவட்டங்களிலேயே வைக்கப்பட்டிருக்கும். தேர்வு நடைமுறைகள் முடிந்த பின்னர் இவை மாவட்ட கருவூலகங்கள் மூலமாக மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவது வழக்கம். இது குறித்து தேர்வாணையம் ஏற்கனவே விரிவான நடைமுறையினை வெளியிட்டு பின்பற்றி வருகிறது.

எனவே. 12.07.2025 மு.ப. அன்று நடந்து முடிந்த ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு IV (தொகுதி - IV) தேர்வு தொடர்பான விடைத்தாள்கள் முறையாக சீலிடப்படாமல் அட்டைப் பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்தன என்று வரும் பத்திரிகை மற்றும் இதர ஊடக செய்திகள் அனைத்தும் ஆதாரமற்றவையாகும். வினாத்தாளுக்கான உத்தேச விடைகள் தேர்வாணைய இணையதளத்தில் 21.07.2025 மாலை 05.00 மணியளவில் வெளியிடப்பட்டு ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின் தெரிவிப்பதற்காக ஒரு வார கால அவகாசமும் அளிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து அனைத்து தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு முன்னரே தேர்வாணையத்தால் தெரிவித்தபடி இந்த தேர்வுகளுக்கான முடிவுகள் மூன்று மாத காலத்திற்குள் வெளியிடப்படும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புத்த, சமண, சீக்கிய மதத்தினர்

# புனிதப் பயணம் மேற்கொள்ள விண்ணப்பிக்கலாம்!

## சிறுபான்மையினர் நல இயக்ககம் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 24-

தமிழ்நாட்டைச் சேர்ந்த 50 புத்த மதத்தினர். 50 சமண மதத்தினர் மற்றும் 20 சீக்கிய மதத்தினர் இந்தியாவில் உள்ள அவரவர் மதங்களுக்கான புனித தலங்களுக்கு புனித பயணம் மேற்கொள்பவர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.10,000/ வீதம் 120 நபர்களுக்கு ரூபாய் 12 இலட்சம் நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் பயணம் மேற்கொண்டு பயன்பெற விரும்பும் புத்த, சமண மற்றும் சீக்கிய மதத்தினரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

புனித தலங்களின் விவரம்:

புத்த மதம் - 1. பீகாரில் உள்ள புத்த கயா, 2. உத்திரபிரதேசத்தில் உள்ள குசிநகர். 3. வாரணாசியில் உள்ள சாரநாத் கோவில், 4. பீகாரில் உள்ள ராஜ்கிர் வைஷாலி, 5. நேபாளத்தில் உள்ள லும்பினி போன்ற இடங்கள்.

சமண மதம் - 1. இராஜஸ்தானில் உள்ள தில்வாரா கோவில், ரணக்பூர் சமண கோவில், ஜெய்சால்மர் சமண கோவில், 2. ஜார்கண்டில் உள்ள சிக்கர்ஜி 3. குஜராத்தில் உள்ள பாலிடனா, 4. பீகாரில் உள்ள பவபுரி சமண கோவில் போன்ற இடங்கள். 5. கர்நாடகாவில் சரவணபெலகோலா.

சீக்கிய மதம் - 1. பஞ்சாப்பில் உள்ள அமிர்தசரஸ், தக்ட் ஸ்ரீகேசகர் சாகிப், தக்ட் ஸ்ரீடாம்டமா சாகிப். 2 பீகாரில் உள்ள தக்ட் ஸ்ரீ ஹர்மந்திர் சாகிப் (குரு கோவிந்த் சிங்), தக்ட் ஸ்ரீ ஹசூர் சாகிப் (மஹாராஷ்டிரா) போன்ற இடங்கள், 3. பாகிஸ்தானிலுள்ள குருத்வாரா ஸ்ரீ நான் காணா சாகிப், குருத்வாரா ஸ்ரீ சச்சா சௌதா, மண்டி சுகர்கானா, குருத்வாரா ஸ்ரீ பஞ்ச சாகிப், ஹசன் அப்தல், குருத்வாரா ஸ்ரீ தெஹ்ரா சாகிப்

இத்திட்டத்தின் கீழ் 01.07.2025க்கு பிறகு புனித பயணம் மேற்கொள்பவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இதற்கான விண்ணப்ப படிவங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறு பான்மையினர் நல அலுவலகம் / சிறுபான்மையினர் நல அலுவலகங்களிலிருந்து கட்டணமின்றி பெறலாம். மேலும் www.bcmbcmw.tn.gov.in என்ற இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை உரிய ஆவணங்களுடன் அனுப்ப வேண்டிய முகவரி ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலசமஹால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம், சென்னை600 005.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய கடைசி தேதி: 30.11.2025.

இவ்வாறு சிறுபான்மையினர் நல இயக்ககம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மு.க.முத்து மறைவிற்கு - குவைத் நாட்டில் இரங்கல் கூட்டம்!

சென்னை.ஜூலை 24-.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மகன் மு.க.முத்து மறைவிற்கு குவைத் நாட்டில் கழகத்தினர் இரங்கல் கூட்டம் நடத்தி அஞ்சலி செலுத்தினர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மகன் மு.க.முத்து அவர்கள் மறைவிற்கு தமிழ்நாடு முழுவதும் அவரது திருஉருவப்படத்திற்கு கழகத்தினரும் திரைத்துறையினர் மற்றும் பொதுமக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர். இதன் தொடர்ச்சியாக குவைத் நாட்டில் குவைத் நாட்டின் அயலக அணியினர் இணைந்து இரங்கல் கூட்டம் நடத்தினர் .

முத்துவேலர் அஞ்சுகம் அம்மாள், மகன் வழி மூத்த பேரனும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர்பத்மாவதி அம்மாள் தம்பதியரின் மூத்த மகனும் தமிழ்நாடு முதலமைச்சர் திராவிடநாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அண்ணனுமான மு.க. முத்து அவர்கள் மறைவையொட்டி குவைத் நாட்டின் அயலக அணி சார்பாக இரங்கல் கூட்டம் நடைபெற்றது

குவைத் நாட்டின் அயலக அணி இணைச்செயலாளர் காட்டூர் சொ.ஆறுமுகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில், அணி செயலாளர் புதுக்கோட்டை மு.பஷீர் அகமது, இணை செயலாளர் வேலம்புதுக்குடி மு.ஜியாவு தீன், தொழிலாளர் அணி செயலாளர் போரூர் ராயல் ஜி.பிரகாஷ் ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

மேலும் தளபதி பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் பட்டுக்கோட்டை சரவணன், அறந்தை அறக்கட்டளை நிறுவனர் முஹம்மது யூனுஸ் , விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள், தமிழ்நாடு முஸ்லிம் கலாச்சார பேரவையின் முன்னாள் தலைவர் சத்திர மணை அசன் முகமது, உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் அப்துல் மஜீத், புகைப்படக் கலைஞர் பக்ருதீன், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழக நிர்வாகி அப்துல் லத்தீப், போன்ற கூட்டணி கட்சி நிர்வாகி களும் பெரும்திரளாக கலந்து கொண்டு ,தன் குரலாலும் நடிப்பாலும் மு.க.முத்து அவர்கள் காத்த திராவிட சுடர் என்றும் ஒளி வீசும் என இரங்கல் தெரிவித்து அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா எம்.எஸ். அப்துல் மஜீத்

ஜூலை 24 (2016)



ஒன்றிணைந்த திருச்சி மாவட்டத்தில் இருந்த புதுக்கோட்டை நகர துணைச் செயலாளர், தொடர்ந்து 17 ஆண்டுகள் நகரச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், புதுக்கோட்டை மாவட்ட அவைத்தலைவர், மாவட்ட பொறுப்புக்குழு செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகம் வளர பாடுபட்டவர்.

அறந்தாங்கி மாநாட்டு செயலாளராகவும், சேலம் சிறப்பு மாநிலச் செயலாளராகவும், புதுக்கோட்டை மாவட்டக் கழக கட்டிடக்குழு செயலாளராகவும் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை நகர வங்கி தலைவராகவும், புதுக்கோட்டை நகர்மன்ற உறுப்பினராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஆறு மாதங்களும் – நெருக்கடிகால மிசா சட்டத்தில் 15 மாதங்களும் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். பழனியப்பன்

ஜூலை 24 (2014)



திராவிட இயக்கத்தில் துவக்க கால உறுப்பினராக இருந்தவர்.

உடுமலைப்பேட்டை நகரத்தில் வட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

உடுமலைப்பேட்டை நகர்மன்ற உறுப்பினராக நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இவர் கூட்டுறவு வங்கி – வீடுகட்டும் சங்கம் – ஆதிதிராவிடர் கூட்டுறவு நாணய சங்கம் போன்ற கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராகவும், இயக்குநராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.